# பி.எம். சுந்தரம் கண்டறிந்த மங்கல இசை மன்னர்கள்

**எஸ்.ராஜேஸ்வரி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

### முன்னுரை

மாவிலைத் தோரணமும் மங்கல நாதஸ்வரமும் தமிழகத்தின் தனிப்பெரும் அடையாளங்கள். கோவில்தோறும் நாள் வழிபாட்டிலும், சிறப்பு வழிபாட்டிலும் முதன்மைபெறும் மங்கல இசையை நுகரும்போது தமிழகத்தில் இருப்பதுபோன்ற உணர்வினைச் செவிபடைத்த ஒவ்வொரு தமிழனும் உணருவான். கடந்த 200, 300 ஆண்டுகளாக ஊர்தோறும் ஒலித்த இசையின் உயர்வினையும், இசைக்காக வாழ்ந்தவர்களையும் இசைமரபை வளர்த்துப் பேணிக் காத்தவர்களையும் பற்றி வெளிவரும் முதல் ஆவணமாக “மங்கல இசை மன்னர்கள்” என்ற நூல் திகழ்கின்றது. இந்த நூலைப் பற்றிய குறிப்பிட்ட முக்கிய கருத்துக்கள் அடங்கியதே இந்த ஆய்வுக்கட்டுரை.

### மறைந்த செய்திகளைக் கண்டறிதல்

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசாமல் தலைச்சிறந்த தமிழகக் கலைகளைப் பற்றிய செய்திகள் மாய்ந்து மறைந்து போவதற்கு முன் அவை திரட்டப்பெறல் வேண்டும். அவ்வகையில் இந்நூல் ஒரு வழிகாட்டி. மங்கல இசை வளர்த்த மன்னர்களின் பெயர் பட்டியலாக அமையாமல் அவர்களின் பெருவாழ்வுச் சுருக்கமாக இந்நூல் ஓவியமாக்கப்பெற்றுள்ளது.

புகழ்பெற்ற கலைஞர்களே அல்லாமல் “நூற்று இருபது கலைஞர்களின்” வரலாறு இங்கே வரையப்பெற்றுள்ளது. சங்ககாலப் பாணர்கள் போல நாதஸ்வரக் கலைஞர்கள், இசைக்காகவே வாழ்ந்தவர்கள், இசைதவிர வேறொன்றிலும் ஈடுபடமாட்டார்கள். சங்க இலக்கியத்தில் கல்லா இளைஞர் என்னும் ஒரு தொடருக்கு உரையாசிரியர்கள்

**“தம் தொழில் ஒன்றினைத் தவிர பிறவற்றைக் கல்லாதவர்கள்”**

என்று உரைவகுப்பார்கள். மங்கல இசை வடிப்பவர்களும் ஏற்ற தொழிலுக்கு ஏற்றம் தருவார்கள். அதனையே போற்றிப் பாதுகாப்பவர்கள். இறைவனைப் போற்றி வழிபடுவதற்கு அதனையே கருவியாகக் கருதுவார்கள். அவர்கள் வாழ்வு வஞ்சகம் சூது அறியாதது. அவர்கள் ஏதும் அறியாததுபோல் இருப்பார்கள். ஆனால் இசைநுட்பம் அனைத்தும் அறிந்தவர்கள்.

இறைவன் திருவீதி உலாவரும் போது, உலாவரும் இசைக் கலைஞர்களை இந்நூல் வாயிலாக நாடறிய வலம்வரச் செய்கிறார் “தஞ்சை பி.எம். சுந்தரம்”. ஒலிவாயிலாக ஊழியம்செய்யும் இறை அடியார்களை வரிவடிவில் உலாவரச் செய்கிறார்.

### எழுத்தாற்றல் மகிமை

பி.எம். சுந்தரம் தம் எழுத்தாற்றலால், புலமையால் கலைஞர்களின் வாழ்வினைப் பதிவு செய்துள்ளார். மறைந்து புதையுண்டு கிடக்கிற அரிய செய்திகளை அரும்பாடுபட்டு அகழாய்வு செய்துள்ளார்.

தேடித்தொகுத்த திறத்தைப் புகழ்வேனா? கலைஞர்களின் வாழ்வுத்திறத்தை வடித்ததை வாயார வாழ்த்துவேனா? உன்னதக் கலைஞர்களின் உயர் விழுமங்களை ஓவியமாக்கிய எழுத்தாற்றலை எண்ணி வியப்பேனா? கலைஞர்களின் குடும்ப அவலங்களைக் கூறியதை நினைப்பேனா? கலைஞர்களின் மறுபக்கங்களையும் மறைக்காது சுட்டிய எழுத்து நேர்மையை எண்ணுவேனா? குலமரபின் உயர்வினைமட்டும் சுட்டாமல் உன்னதங்களை மட்டும் எடுத்து விளம்பாமல் உண்மைகளை உரைத்த உத்தம எழுத்தாளருக்கு வணக்கங்கள்.

தேடுதல் எல்லார்க்கும் இயலும் செயலன்று. தொய்வின்றித் தொடர்ந்து தேடி பெறுபவர் மிகச் சிலர். அச்சிலருள் இவர் குறிப்பிடத்தக்கவர். இவர் தேடித்தொகுத்த செய்திகள் எத்தனை எத்தனை! இந்நூலை இசைக் களஞ்சியமாக்குவதற்கு இவர் பட்ட பாடுகள்தான் எவ்வளவு? நாயனக்காரர்களை மட்டுமல்ல. தவிசிட்டு வரவேற்கப்பட்ட தவில்காரர்களையும் விடவில்லை. மேளக் கச்சேரிகளைச் சாதாரணமாக நினைப்பவர்கள்கூட இந்த மேன்மைமிகு நூலைப் பார்த்தால், படித்தால், கற்றால், தனித்தன்மைவாய்ந்த தமிழகத்தை அடையாளங்காட்டக்கூடிய இசைக்கலையின் தோற்றத்தையும், ஏற்றத்தையும் அறிவர்

**மங்கல இசையின் தோற்றம்**

மங்கல இசை என்ற பெயர் நாதஸ்வர இசைக்கு எப்படி ஏற்பட்டிருக்க வேண்டும்

**“எழில் இயம்ப இயம்பும் வெண் சங்கு எங்கும்”**

என்றது திருவாசகம். எழில் ஏழு சுரத் துளைகள் உடைய நாகசுரமே “மாதர் மடப்பிடியும்” என்ற தேவாரத்தில் “எழில்பயில்” என்று வருகிறது. எழில் என்ற சொல் குயில் நாகசுரத்தைக் குறிப்பிடுகிறது. நாகசுரத்தை ஒத்த இனிய ஓசையை உடைய குயில் என்பது இந்த செய்யுள் அடியின் பொருள்.

மங்கலமாய் நாளைத் தொடங்கப் பயன்படும் இசைக்கருவிக்கு மங்கலவாத்தியம் என்று பெயர். நாகஸ்வரம் என்ற இசைக்கருவி 17வது நூற்றாண்டில்தான் தோற்றம் பெற்றதென்று வாதித்து எழுதியிருப்போர் பலருக்கு வேதத்திலே நின்றெழு நாகசுரத்தின் தோற்றம் எனத் தொடங்கும் “பரத சாஸ்திரப் பாடலை முன்வைத்து, இக்கருவியின் காலத்தை வேதகாலத்துக்கு கொண்டு போவோரும் உண்டு. ரிக் வேதத்திலே “உத்தால வேணு” என்று பேசப்படுவது நாகஸ்வரமே என்று வேதங்களின் ஆய்வு செய்வோர் கூறுகின்றனர். கி.பி. 12ம் நூற்றாண்டில் எழுந்த மங்கரஸரின் “மங்காபிதானம்” எனும் கன்னட மொழி நிகண்டு நாகஸ்வரம் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. கி.பி. 15ம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற வசன காவியங்களிலும் “க்ரீடாயிராமம்” போன்ற தெலுங்கு மொழி இலக்கியங்களிலும் இக்கருவி குறிப்பிடப்பட்டுள்ளது. வங்கியம் அல்லது பெருவங்கியம் என்று சங்க இலக்கியங்களில் பேசப்படுவது இன்றைய நாகஸ்வரமே என்றும், வங்கியம் வேறு, குழல் வேறெனப் பல நூல்களில் பிரித்துப் பேசப்படுவதாயும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆலயம் என்ற ஒன்று எழுந்த அன்றே நாகஸ்வரமும் பிறந்துவிட்டதென்பது ஆய்வறிஞர்களின் முடிவு. “டிண்டிமம்” என்பதைத்தான் இன்றைய தவில் என்று கூறுவதுண்டு. யாழ்ப்பாணத்தில் இதற்கு “யமபேரி” என்ற பெயரும் இருந்துள்ளது. ஆகம நூல்களில் “மட்டுகம்” எனப்படுவதே தவில் எனக்கூறுதல் பொருந்தும் என்பது ஆய்வாளர்களின் கருத்து. ஆலயத் திருவிழாவுக்கான கொடியேற்றம் நடைபெறும் முன்பாகத் தவிலுக்குப் பூசை நடத்தும் மரபு வழக்கமாகக் காணப்படுவதாகும்

**மங்கல இசை மன்னர்கள் பற்றிய குறிப்பு**

நாகசுரத்தையும், தவிலையும், இசைப்போரின் வாழ்க்கைக் குறிப்புகளையும், சாதனைகளையும் தொகுத்து வருங்கால சந்ததியினர் தெரிந்துகொள்ளும்வகையில் நூலாக வெளியிடுவது இன்றியமையாததாகும்.

“மங்கல இசை மன்னர்கள்” என்னும் தலைப்பில் 68 நாகசுரக் கலைஞர்கள் மற்றும் 43 தவில் கலைஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும், அவர்கள் இசையுலகில் புரிந்த சிறப்பான சாதனைகளையும் தந்துள்ளார். இந்த இசைக் கலைஞர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சிறப்பான நிகழ்ச்சிகளை ஆசிரியர் சுவை ததும்பக் கூறியுள்ளார்.

நாயனக்கலைஞர் மரபில் தோன்றி அந்த மரபுக்கும் பெருமை சேர்த்த புகழ்மிக்க நாயனக்காரர்களைப் பற்றிக் கேட்டும் கண்டும், அறிந்த செய்திகளை அழகாகத் தொகுத்து எழுதித் தந்திருக்கிறார் சுந்தரம்.

பிறந்த தேதி, திருமணம் நடந்த தேதி, மறைந்த தேதி, உடன் பிறந்தவர், பிள்ளைகள், அவர்களது இன்றையநிலை என்று ஒருவிவரம்கூட விடாமல் சேர்ந்திருக்கின்ற முயற்சிக்காக இவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். நூற்றுப் பதினான்கு நாயனக் கலைஞர்கள் வரலாறு இந்த நூலில் அடங்கியிருக்கிறது. இரண்டு நூற்றாண்டு நாயன இசை வரலாறு என்றுகூடச் சொல்லலாம்.

**இசைக் கலைஞர்களின் குறிப்பிடத்தக்க சுபாவம்**

இந்தக் கலைஞர்களின் தெய்வபக்தியைப் பார்த்து வியக்காமல் இருக்க முடியவில்லை. கச்சேரிக்குச் சம்பாவனையோடு ஒரு யானையும் வேண்டும் என்று கேட்டுப்பெற்று யானையைக் கோவிலுக்குக் கொடுத்திருக்கிறார் மன்னார்குடியார். தமக்கு அளிக்கப்பட்ட அலங்காரப் பரிசான நவரத்தினமாலையை தாம் வழிபடும் முருகனுக்குச் சாத்தி இருக்கிறார், திருவாவடுதுறையார்.

**நாகப்பட்டினத்தார்**

பட்டப் படிப்பு படித்த இளைஞனை நாகசுர வாசனை இல்லாதவன் என்று சிலர் கேலி செய்யப்போக, எனக்கு உத்தியோகம் வேண்டாம், நாகசுரம்தான் வேண்டும் என்று அசுரசாதகம் செய்து முன்னேறிய அந்தக் கலைஞரின் வரலாறு வியப்பை அளிக்கிறது. தமக்கு குதிரை வண்டி ஓட்டியவர் மகளுக்குத் திருமணம் என்று பத்திரிக்கை வைத்தவுடன் திருமாங்கல்யம் செய்துகொடுத்து உதவி செய்தார் மன்னார்குடி நாயனக்காரர். யாரும் எதிர் பார்க்காத வேளை அவர் வீட்டில் கச்சேரி செய்து மகிழ்வித்தார்.

பல மொழிகளைக் கற்றவர், தாங்களே சிறந்த இசை உருப்படிகளை இயற்றியவர்கள், மாணவர்களைக் கண்மணி போல் எண்ணியவர்கள், பாடம் சொல்லுவதற்கென்றே வாழ்நாளைச் செலவிட்டவர்கள், இப்படி இன்னும் பலவகைக் குணாதிசயங்களைக்கொண்ட உன்னதமான கலைஞர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். பி.எம். சுந்தரம் அமரர்களான கலைஞர்களைப் பற்றி எழுதி அற்புதம் செய்திருக்கிறார்.

**உதவிய நூல்**

1. மங்கல இசைமன்னர்கள், ஆசிரியர் தஞ்சாவூர் பி.எம். சுந்தரம் மெய்யப்பன் தமிழாய்வக வெளியீடு, சென்னை, 2001